Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சேவை
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59985

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 20, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 37

# ‘கற்பித்தல் வாசிப்பு இயக்கம்‘

## என்ற புதிய திட்டம் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்



சென்னை ஆகஸ்ட் 20 2021: சட்டசபையில் நேற்று பொது பட்ஜெட் மீதான விவாதத்துக்கு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதில் அளித்து பேசினார்.

அப்போது அவர் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள் வருமாறு:-

கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஒன்றரை வருடமாக பள்ளிக்கூடங்கள் நடக்கவில்லை.

இந்த சூழலில் மாணவர்களை திடீரென பள்ளிக்கு அழைத்து வகுப்புகள் நடத்தினால் பலர் வர விரும்ப மாட்டார்கள். ஆசிரியர்களுக்கும் தயக்கம் இருக்கும்.

இந்த சூழ்நிலையில் தற்போது குழந்தை திருமணங்களும், குழந்தை தொழிலாளர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இவற்றை திருத்தும் வகையில் மிகச் சிறந்த திட்டமாக ‘கற்பித்தல் வாசிப்பு இயக்கம்‘ என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இது பற்றிய விவரங்களை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் தெரிவிப்பார்.

இந்த திட்டத்துக்கு இந்த நிதி ஆண்டில் ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி நேரத்துக்குப் பிறகு சிறப்பு வகுப்புகளை நடத்தும் திட்டம் இதுவாகும்.

நந்தனத்தில் உள்ள நிதித்துறைக்கு சொந்தமான கட்டிடத்துக்கு முன்னாள் நிதி அமைச்சர் பேராசிரியர் கே.அன்பழகன் மாளிகை என்ற பெயர் சூட்டப்படும்.

பெட்ரோல் விலையை 3 ரூபாய் குறைந்ததன் காரணமாக தினமும் 12 சதவீத அளவுக்கு பெட்ரோல் விற்பனை அதிகரித்துள்ளது. இதனால் 11.29 லட்சம் லிட்டர் பெட்ரோல் கூடுதலாக விற்பனையாகி உள்ளது.

இதனால் மத்திய அரசுக்கு தினமும் கூடுதலாக 3.55 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும். முதல்-அமைச்சர் செய்த விலை குறைப்பு நடவடிக்கையால் மத்திய அரசுக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.1,200 கோடி கூடுதல் வருமானம் வரும்.

அனைத்து துறைகளிலும் சீர்திருத்த நடவடிக்கைகள் வர உள்ளன. தரமற்ற கட்டிடங்களை ஆய்வு செய்வதுபோல் பல துறைகளில் ஆய்வு செய்ய வேண்டி உள்ளது. இது பழி வாங்கும் நடவடிக்கை இல்லை. புரிதலுக்கான நடவடிக்கை.

இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து பல்வேறு விளக்கங்களை அளித்தார்.

## 293-வது மதுரை ஆதீனமாக ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 23-ந் தேதி முறைப்படி பதவியேற்பு

### மதுரை ஆதீனத்தின் 293-வது பீடாதிபதியாக பதவியேற்றுள்ளேன் நித்யானந்தா பதவியேற்பு நிகழ்ச்சிக்கு சிக்கல் ஏற்படுமா?



மதுரை, ஆகஸ்ட் 20 2021: தமிழகத்தின் பழமை வாய்ந்த சைவ சமய நெறிமுறைகளை கையாளும் மடங்களில் மதுரை ஆதீனமும் ஒன்றாகும்.

சுமார் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த மடத்தின் 292-வது குரு மகா சன்னிதானமாக அருணகிரிநாதர் இருந்து வந்தார். சுமார் 46 ஆண்டுகள் பீடாதிபதியாக இருந்த அருணகிரிநாதர் கடந்த 13-ந் தேதி மரணம் அடைந்தார்.

இதையடுத்து அவரது இடத்திற்கு இளைய ஆதீனமாக இருந்த ஹரிஹர ஞானசம்பந்த தேசிக சுவாமிகளை நியமிப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே ஆதீனம் அருணகிரிநாதர் மறைவுக்குப் பிறகு மடத்தின் தினசரி பூஜைகள் மற்றும் நிர்வாக பணிகளை இளைய ஆதீனம் கவனித்து வருகிறார்.

அவரிடம் ஆதீனத்துக்கு சொந்தமான கிலோ கணக்கிலான நகைகள், பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்து ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஆகியவையும் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் 293-வது ஆதீனமாக ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் முறைப்படி பதவியேற்கும் விழா வருகிற 23-ந் தேதி (திங்கட்கிழமை) நடைபெறுகிறது.

மதுரை தெற்கு ஆவணி மூல வீதியில் உள்ள ஆதீன மடத்தில் அன்று காலை 11 மணிக்கு பதவி ஏற்பு விழா நடைபெறுகிறது. தொடர்ந்து பல்வேறு சடங்கு சம்பிரதாயங்கள் நடைபெறுகின்றன.

பிற்பகல் 1. 30 மணிக்கு மகேஸ்வர பூஜையும் மாலையில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு, குருமூர்த்தி வழிபாடு ஆகியவை நடைபெறுகின்றன. இரவு 8 மணி அளவில் பட்டிணப்பிரவேசமும், கொலு காட்சியும் நடைபெறுகின்றன.

முன்னதாக காலை 10 மணியளவில் மறைந்த ஆதீனம் அருணகிரிநாதருக்கு குருபூஜை ஆதீன மடத்தில் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து அவர் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திலும் அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன.

இதைத்தொடர்ந்து 293-வது பீடாதிபதியாக இளைய ஆதீனம் ஹரிஹர ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறார்.

இந்த விழாவில் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் உள்ள ஆதீனங்கள் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பாக தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், கோவை ஆதீனம் மற்றும் ஆன்மீக பெரியவர்கள் முக்கிய பிரமுகர்கள் விழாவில் பங்கேற்கிறார்கள்.

மதுரை ஆதீன மடத்தில் புதிய ஆதீனம் பதவி ஏற்க ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில் மதுரை ஆதீனத்தின் 293-வது பீடாதிபதியாக பதவியேற்றுள்ளேன் என முகநூலில் புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளார் நித்யானந்தா.

புதிய மடாதிபதியாக பதவியேற்று உள்ளதால் மதுரை ஆதீனத்தின் அனைத்து முடிவுகளையும் தான் மட்டுமே எடுக்க முடியும் என்றும் பதிவிட்டு புதிய பரபரப்பை நித்யானந்தா ஏற்படுத்தியிருக்கிறார்.

நித்யானந்தாவின் இந்த புதிய சர்ச்சை காரணமாக வருகிற 23-ந் தேதி மதுரை ஆதீன மடத்தில் நடைபெறும் பதவியேற்பு நிகழ்ச்சிக்கு சிக்கல் ஏற்படுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

நித்யானந்தா மதுரை ஆதீனத்தின் இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டது தொடர்பான வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் நித்யானந்தாவின் முகநூல் பதிவு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மதுரை ஆதீன மடத்தின் நிர்வாகிகள் கூறியதாவது-

மதுரை ஆதீனத்தின் செயல்பாடுகளில் தலையிட மாட்டேன் என்று கோர்ட்டில் ஏற்கனவே நித்யானந்தா உறுதியளித்துள்ளார்.

எனவே முகநூல் மூலம் அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு மதுரை ஆதீன நிர்வாகத்தை எந்த வகையிலும் பாதிக்காது. எனவே வருகிற 23-ந் தேதி நடைபெற உள்ள 293-வது ஆதீனம் பொறுப்பேற்றுக் கொள்வதையோ, ஆதீன மடத்தின் செயல்பாடுகளையோ, நித்யானந்தாவின் இந்த புதிய சர்ச்சை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

எனவே திட்டமிட்டபடி புதிய ஆதீனம் பதவி ஏற்பதற்கான அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும் அனைத்து ஆதீனங்களும் புதிய பீடாதிபதி ஹரிஹர ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளுக்கு ஆதரவைத் தெரிவித்து உள்ளனர்.

எனவே நித்யானந்தாவின் நடவடிக்கையால் மதுரை ஆதீன நிர்வாகத்திற்கு எவ்விதமான பாதிப்பும் இருக்காது என்றே தெரிகிறது.

புதிய ஆதீனம் ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நெல்லையில் 1954-ம் ஆண்டு மார்ச் 25-ம் தேதி பிறந்தார்.

தந்தை காந்திமதிநாதன் பிள்ளை, தாயார் ஜானகி அம்மாள். இவரது இயற்பெயர் பகவதி லட்சுமணன். தனது 21-வது வயதில் துறவறம் பூண்டார்.

1975-76 வரை குன்றக்குடி ஆதீனத்தின் ஆறுமுகத் தம்பிரானாகவும், 1976 முதல்1980 வரை தருமபுர ஆதீன மடத்தில் நெல்லையப்ப தம்பிரானாகவும் 1980 முதல் 2019 வரை திருவாவடுதுறை ஆதீனத்தில் சுந்தரமூர்த்தி தம்பிரானாகவும் பணியாற்றினார்.

இதன் பின்னர் 2019-ம் ஆண்டு ஜூன் 6 -ந் தேதி மதுரை ஆதீனம் அருணகிரிநாதரால் ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என பெயர் சூட்டப்பட்டு இளைய ஆதீனமாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

## சிறையில் வாழ விரும்புபவர்களுக்காக ரூ.500 கட்டணம் செலுத்தி ஒரு நாள் முழுவதும் சிறையில் கைதியாக தங்கும் திட்டம்

பெலகாவி, ஆகஸ்ட் 20 2021: கர்நாடக மாநிலம் பெலகாவியில் ஹிண்டல்கா சிறை உள்ளது. இந்த சிறையில் விசாரணை கைதிகள், ஆயுள் தண்டனை கைதிகள் என 500-க்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த சிறையில் தான் ரூ.500 கட்டணம் செலுத்தினால் ஒரு நாள் முழுவதும் கைதியாக வாழும் திட்டத்தை அதிகாரிகள் அமல்படுத்த உள்ளனர். இதுகுறித்து அந்த சிறையின் அதிகாரிகள் கூறும்போது:-

சிறையில் வாழ விரும்புபவர்களுக்காக ரூ.500 கட்டணம் செலுத்தி ஒரு நாள் முழுவதும் சிறையில் கைதியாக தங்கும் திட்டத்தை அமல்படுத்த முடிவு செய்து உள்ளோம். இதற்காக அரசின் அனுமதியை எதிர்பார்த்து உள்ளோம். இங்கு வருபவர்களுக்கு கைதியின் சீருடை, கைதி எண், கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு, கைதிகள் செய்யும் வேலைகள் ஆகியவை வழங்கப்படும். அவர்களும் கைதிகள் போலவே நடத்தப்படுவார்கள்.

அவர்களுக்கு எந்த சலுகைகயும் அளிக்கப்படாது. இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் குற்றச்சம்பவங்களில் ஈடுபடுவதை தடுக்க தொடங்கப்பட்டு உள்ளது. கைதிகள் வாழ்க்கை குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த இந்த திட்டம் தொடங்கப்படுகிறது. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

## அ.தி.மு.க.வை சேர்ந்த மறைந்த முன்னாள் முதல் - அமைச்சர் ஜெயலலிதா ஓய்வு எடுக்கச் செல்லும் கொடநாடு எஸ்டேட்டில் கொலை, கொள்ளை சம்பவங்கள் நடந்தன



சென்னை, ஆகஸ்ட் 20 2021: அ.தி.மு.க.வை சேர்ந்த மறைந்த முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஓய்வு எடுக்கச் செல்லும் கொடநாடு எஸ்டேட்டில், அவர் மறைவுக்கு பிறகு கொலை, கொள்ளை சம்பவங்கள் நடந்தன.

இந்த சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. மேலும் இது தொடர்பான வழக்கும் கோர்ட்டில் நிலுவையில் இருந்து வருகிறது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் முக்கிய குற்றவாளியான சயான் ஜாமினில் வெளியே இருந்து வரும் நிலையில் நேற்று முன்தினம் போலீஸ் விசாரணைக்கு ஆஜராகி பரபரப்பு வாக்குமூலம் அளித்தார்.

அப்போது முன்னாள் முதல்-அமைச்சரும் எதிர்க்கட்சித்தலைவருமான எடப்பாடி பழனிசாமியிடம், கொடநாடு எஸ்டேட்டில் கொள்ளை போன சில முக்கிய ஆவணங்களை அளித்தாக அவர் போலீசாரிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்த தகவல் நேற்று பத்திரிகைகளில் செய்தியாக வெளிவந்த நிலையில் நேற்று சட்டசபை தொடங்கியதும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிஎழுந்து இந்த விவகாரம் தொடர்பாக பேச முயன்றார். ஆனால், சபாநாயகர் அப்பாவு அதற்கு அனுமதி அளிக்கவில்லை.

அதிமுகவினர் எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கோ□ஷமிட்டதால், அனைவரும் கூண்டோடு வெளியேற்றப்பட்டனர்.

பின்னர், பேட்டி அளித்த எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, ‘‘திட்டமிட்டு அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு என்னை பழிவாங்க பார்க்கிறார்கள். கொடநாடு வழக்கில் என் பெயரை சேர்க்க சதி செய்கிறார்கள்’’ என்று தி.மு.க. அரசை குற்றம்சாட்டினார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி, துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் முக்கிய அ.தி.மு.க. உறுப்பினர்களுடன் இன்று கவர்னர் பன்வாரிலால் புரோகித்தை சந்தித்து பேசினார்கள்.

சென்னை கிண்டியில் உள்ள ராஜ்பவனில் கவர்னர் பன்வாரிலால் புரோகித்தை சந்தித்த அவர்கள், தி.மு.க.வின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையை தடுக்க வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்தனர்.

கவர்னரின் பதிலை பொறுத்து, அடுத்த கட்டமாக என்ன செய்யலாம் என்று ஆலோசனை நடத்த எடப்பாடி பழனிசாமியும், ஓ.பன்னீர்செல்வமும் திட்டமிட்டுள்ளனர். கொடநாடு விவகார வழக்கு விசாரணை மீண்டும் தூசி தட்டப்பட்டுள்ளதால், தமிழக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# சென்னை ஐஐடி கேந்திரிய வித்யாலயா பள்ளியில் விடுதலையின் அம்ருத் மஹோத்சவம் 2021 கொண்டாட்டம்



சென்னை, ஆகஸ்ட் 20 2021: சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயாவில் மண்டல அளவிலான விடுதலையின் அம்ருத் மஹோத்சவ நிகழ்ச்சி காணொலிக் காட்சி வாயிலாக (ஆகஸ்ட் 18, 2021) நடைபெற்றது. சென்னை மண்டலத்தைச் சேர்ந்த 6 தொகுப்புகள் இதில் கலந்துகொண்டு தேசிய அளவில் போட்டியிடுவதற்காக வெவ்வேறு பிரிவுகளில் சிறந்த படைப்புகளை அனுப்பின. குழு பாடல் / தனிநபர் பாடல் மற்றும் தனிநபர் நடனத்திற்கு நாட்டுப்பற்று / கிராமிய கலை, தேசிய ஒருமைப்பாடு, சமூக ஒருங்கிணைப்பு, இளைஞர் / மகளிர் மேம்பாடு ஆகியவை தலைப்பாக கொடுக்கப்பட்டன.

சென்னை மண்டல அலுவலகத்தின் துணை ஆணையர் டி. பிரம்மானந்தம் பேசுகையில், ஒரே பாரதம், உன்னத பாரதம் திட்டத்தின் நோக்கம் பற்றி விளக்கினார். குழந்தைகளிடையே நாட்டுப்பற்றை ஏற்படுத்துவதற்காக இந்திய அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தியாவின் சமூக-கலாச்சாரம், அரசியல் மற்றும் பொருளாதார அடையாளங்களின் எடுத்துக்காட்டாக விடுதலையின் அம்ருத் மஹோத்ஸவம் விளங்குகிறது. நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய சென்னை மண்டல அலுவலகத்தின் துணை ஆணையர் ராஜேஸ்வரி, கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் ஒவ்வொரு குழந்தையும் கொண்டாட்டங்களின் வாயிலாக கற்பதற்கு தயார்படுத்தப்படுகின்றனர் என்று கூறினார். சமூக அறிவியல், வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் மாற்றுகிறது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் வித்யாலயா மேலாண்மைக்குழு தலைவர் பேராசிரியர் பிரதாப் ஹரிதாஸ், குழந்தைகளிடையே நாட்டுப்பற்றை ஊக்குவிப்பதில் பள்ளிகள் மிகச்சிறந்த பணிகளை மேற்கொள்வதாகவும், கேந்திர வித்யாலயாவின் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் விதம் தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் தெரிவித்தார். தங்களைத் தாங்களே ஆராய்ந்து கொள்வதற்கும், தங்களது திறமைகளில் சிறந்து விளங்குவதற்கும் மாணவர்களுக்கு விரிவான வாய்ப்பு வழங்கப்படுகிறது. தனிநபர் இசை, தனிநபர் நடனம், குழு பாடல் உள்ளிட்ட ஏராளமான போட்டிகளில் மொத்தம் 50 மாணவர்கள் மண்டல அளவில் கலந்து கொண்டனர்.

இளநிலை மற்றும் முதுநிலை பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் மொத்தம் நான்கு பேர் (மாணவர் மற்றும் மாணவி) கொல்கத்தா மண்டலத்தில் நடைபெற உள்ள தேசிய அளவிலான போட்டிக்குத் தேர்வு செய்யப்படுவார்கள். குழு பாடல், எர்ணாகுளம் மண்டலத்திலும், தனிநபர் பாடல் மண்டல அளவு வரையிலும் நடைபெறும்.

இந்த தகவல், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயா பள்ளியின் தலைமை ஆசிரியர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரியகுளம்: தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே பொம்மிநாயக்கன்பட்டியில் அரசு உயர்நிலைப்பள்ளி மாபெரும் தேனி மாவட்ட காவல்துறை கிராமத்தை பார்வையிட்டு சமூக ஒற்றுமையை மேம்படுத்துதல் மற்றும் சாதனையாளர்களை பாராட்டும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது .தமிழ்த்தாய் வாழ்த்து வரவேற்புரை காவல் ஆய்வாளர் பெரியகுளம் காவல் நிலையம் மீனாட்சி வரவேற்புரையேற்று சிறப்புரையாற்றினார் .காவல்



கண்காணிப்பாளர் டோங்கரே பிரவீன் உமேஷ் தலைமையேற்று முக்கியபிரமுகர்களுக்கு சால்வை அணிவித்து ஷீல்டு வழங்கி சிறப்புரையாற்றினார் .ராஜேந்திரன் ,முத்துக்குமார் ,தங்கவேல் ,ஷம்சுத்தா ,லோகநாதன் ,சுசிலா ,தங்கதுரை ,நாராயணமூர்த்தி ,முகமது ஷேக் இப்ராஹிம் ,மஞ்சு ,புஷ்பகலா ,சின்னப்பாண்டியன் ,டாக்டர் தாரண்யசெல்வி ,ஆகியோர் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்புரை வழங்கினார்கள் . காவல்துறை கண்காணிப்பளாரை பற்றி பொம்மிநாயக்கன்பட்டியில் ஆசிரியராக பணிபுரியும் விஜய் காந்திஜி முக்கியமான பேச்சுக்கள் புகழ்ந்து பேசி வாழ்த்துரை வழங்கினார் . கா முத்துக்குமார் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு சால்வை அணிவித்து கேடயம் வழங்கினார் . தேனி மாவட்ட அனைத்து காவல் நிலைய அதிகாரிகளும் பணியாளர்களும் துப்புரவு தொழிலாளர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர் .அனைவர்க்கும் இனிப்பு காரம் வழங்கி நன்றியுரையாற்றினார் .இறுதி முடிவில் அனைவரும் எழுந்து நின்று தேசிய கீதம் ஒலிக்கப்பட்டது. அனைவரும் கலைந்து சென்றனர் .

# புவியியல் துறையில் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை ஒப்புதல்

புதுதில்லி, ஆகஸ்ட் 18, 2021: புவியியல் துறையில் இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய குடியரசின் சுரங்கங்கள் துறையின் ஜியாலஜிக்கல் சர்வே ஆஃப் இந்தியா மற்றும் அமெரிக்காவின் புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகத்தின் புவி மற்றும் சுற்றுச்சூழல் துறை, கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி சார்பாக பல்கலைக்கழகத்தின் அறங்காவலர் குழு ஆகியவற்றுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும். புவியியல் அறிவை மேம்படுத்துதல், புவியியல் தொடர்பான ஆராய்ச்சிகள், ஒத்துழைப்பு திட்டங்களை உருவாக்குதல், தகவல் பரிமாற்றம், பரஸ்பர நலன் சார்ந்த இதர துறைகளில் இணைந்து பணியாற்றுதல் ஆகியவற்றுக்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கும். புவியியல் துறையில் ஜியாலஜிக்கல் சர்வே ஆஃப் இந்தியா மற்றும் புளோரிடா சர்வதேச பல்கலைக்கழகத்திற்கு இடையே அமைப்புரீதியான கட்டமைப்பை இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழங்கும்.

# ஐசிஎம்ஆர் மற்றும் எதிர் நுண்ணுயிர் தடுப்பு ஆராய்ச்சி மற்றும் சுவிட்சர்லாந்து இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுதில்லி, ஆகஸ்ட் 20 2021: இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐசிஎம்ஆர்) மற்றும் எதிர்நுண்ணுயிர் தடுப்பு ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான ஜிஏஆர்டிபி அமைப்பு, சுவிட்சர்லாந்து இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கூட்டுறவு கட்டமைப்புக்குள் உறவுகளை வலுப்படுத்தவும், பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் கடந்த மார்ச் மாதம் செய்யப்பட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையிடம் விளக்கப்பட்டது.

# நாட்டுப்புற மற்றும் பழங்குடி ஓவியங்களின் சர்வதேச கண்காட்சியை உபேந்திர பிரசாத் சிங் திறந்து வைத்தார்

புதுதில்லி, ஆகஸ்ட் 20 2021: "ரீட்டியோன் சே கலாகிரிதியோன்கா சஃபர்" எனும் நாட்டுப்புற மற்றும் பழங்குடி ஓவியங்களின் சர்வதேச கண்காட்சியை தேசிய கைவினை அருங்காட்சியகம் மற்றும் ஹஸ்தகலா அகாடெமியில் மத்திய ஜவுளி அமைச்சகத்தின் செயலாளர் திரு உபேந்திர பிரசாத் சிங் இன்று திறந்து வைத்தார். கைவினை பொருட்கள் மேம்பாடு ஆணையர் அலுவலகம் மற்றும் ஒடி கலை மையம் இணைந்து ஏற்பாடு செய்த இந்த கண்காட்சியில் ஏழு நாடுகளில் இருந்து (இந்தியா-102, தென் கொரியா-8, மியான்மர்-2, இலங்கை-2, வங்கதேசம்-3 மற்றும் நேபாளம்-7) 125 நாட்டுப்புற மற்றும் பழங்குடி ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஆகஸ்ட் 18 முதல் செப்டம்பர் 3 வரை இந்த சிறப்பு கண்காட்சி நடைபெறும்.

நிகழ்ச்சியில் உரையாற்றிய திரு உபேந்திர பிரசாத் சிங், பல்வேறு கலைப் படைப்புகளை ஒரே இடத்தில் காண்பதற்கான வாய்ப்பை கலை ரசிகர்களுக்கு இத்தகைய கண்காட்சிகள் வழங்குவதோடு, கலைஞர்களுக்கும் ஊக்கமளிக்கும் என்றார். மிகவும் பிரபலமான இந்திய கைவினை பொருட்களை ஊக்குவிக்க கைவினை பொருட்கள் மேம்பாடு ஆணையர் அலுவலகத்தை அரசு அமைத்துள்ளதாகவும், கலைகள் மற்றும் கலைஞர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# கொவிட்-19 தடுப்பு மருந்து வழங்கலின் 215-வது நாள்: 56.57 கோடிக்கும் அதிகமானோருக்கு இது வரை தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன

புதுதில்லி, ஆகஸ்ட் 20 2021: 7 மணி அளவில் வெளியான தற்காலிக அறிக்கையின் படி, 56.57 கோடிக்கும் அதிகமானோருக்கு (56,57,32,128) கொவிட்-19 தடுப்பூசிகளை நாடு இது வரை செலுத்தி உள்ளது.

ஜூன் 21-ல் இருந்து அனைவருக்கும் தடுப்புமருந்து வழங்கும் நடவடிக்கை தொடங்கி உள்ள நிலையில், இன்றிரவு 7 மணி அளவிலான தற்காலிக அறிக்கையின் படி, 48 லட்சத்திற்கும் அதிகமான (48,81,588) தடுப்பூசி டோஸ்கள் இன்று வழங்கப்பட்டுள்ளன

18-44 வயது பிரிவில் 25,93,571 பயனாளிகள் தங்களது முதல் டோஸ் தடுப்பூசியையும், 5,77,183 பயனாளிகள் தங்களது இரண்டாவது டோசையும் இன்று பெற்றனர், 37 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் இருக்கும் 20,80,43,061 பேர் முதல் டோசையும், 1,72,81,211 நபர்கள் இரண்டாம் டோசையும் மூன்றாம் கட்ட தடுப்பூசி வழங்கல் தொடங்கியதில் இருந்து இதுவரை பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டில் மட்டும் 11439788 பேர் முதல் டோஸ் தடுப்பூசியையும், 955984 நபர்கள் இரண்டாம் டோசையும் இதுவரை செலுத்திக் கொண்டுள்ளனர். புதுச்சேரியில் 298727 பேர் முதல் டோஸ் தடுப்பூசியையும், 7717 பேர் இரண்டாம் டோசையும் இதுவரை செலுத்திக் கொண்டுள்ளனர்.

# உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக மகத்தான வெற்றி பெற ஒற்றுமையுடன் பாடுபடுவோம்: செம்பாக்கத்தில் மேற்கு மாவட்ட மாணவரணி செயலாளர் செம்பாக்கம் ஜி.எம்.சாந்தகுமார் சூளுரை

காஞ்சிபுரம், ஆகஸ்ட் 20 2021: வரும் உள்ளாட்சித் தேர்தலில் அனைத்து இடங்களிலும் அதிமுக மகத்தான வெற்றி பெற ஒற்றுமையுடன் பாடுபடுவோம் என்று செம்பாக்கத்தில் மேற்கு மாவட்ட மாணவரணி செயலாளர் செம்பாக்கம் ஜி.எம்.சாந்தகுமார் சூளுரைத்தார்.



செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் செம்பாக்கம் அருகே செல்லிநகரில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலயம் திருக்கோவிலில் 42 ஆம் ஆண்டு ஆடித் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. அம்மனுக்கு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், கூழ் வார்த்தல், சாமி ஊர்வலம், அன்னதானம் ஆகியவை நடைபெற்றது. இதில் பக்தர்கள் சமூக இடைவெளியுடன் முக கவசம் அணிந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட மாணவரணி செயலாளர் செம்பாக்கம் ஜி.எம். சாந்தகுமார் உள்ளாட்சி தேர்தலில் அதிமுக மகத்தான வெற்றி பெற வேண்டிக் கொண்டார். பிறகு அவர் பேசியதாவது: புரட்சித்தலைவி அம்மாவின் வழியில் ஆட்சி புரிந்த முன்னாள் தமிழக முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி, முன்னாள் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர்,மக்கள் நலனுக்காக பல்வேறு அரசு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளதுள்ளனர். பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை அவர்களின் தேவைகளை அறிந்து அண்ணா திமுக அரசு அடுக்கடுக்கான பல திட்டங்களை வகுத்து சாதனைகளை புரிந்துள்ளது. புயல், மழை உள்ளிட்ட பேரிடர் காலம் மற்றும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் அண்ணா திமுக அரசு மக்களுடன் துணை நின்றது. நமது அம்மா அரசு கொரோனா பெருந்தொற்று காலத்தில், நோய் தொற்று பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் செயல்படுத்தி, நோய் பரவல் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தது. வரும் உள்ளாட்சித் தேர்தலில் நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு அண்ணா திமுக அரசின் மகத்தான சாதனைகளை மக்களிடம் எடுத்துக்கூறி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் மாபெரும் வெற்றி பெற்று அந்த வெற்றிக்கனியை தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி கே. பழனிச்சாமி, முன்னாள் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் ஆகியோரிடம் சமர்பிப்போம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# பொருளூர் ஊராட்சியில் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் இ.பிரபாகரன் தலைமையில் கோவிசீல்டு தடுப்பூசி முகாம் நடைபெற்றது

ஒட்டன்சத்திரம், ஆகஸ்ட் 20 2021: திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொப்பம்பட்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட பொருளூர் ஊராட்சியில் கோவிசீல்டு தடுப்பூசி முகாம் மற்றும் கபசுரக் குடிநீர் வழங்கும் நிகழ்ச்சி திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின் படியும் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் இ.பிரபாகரன் தலைமையிலும், பொருளூர் ஊராட்சி மன்ற தலைவர் பரமேஸ்வரி சக்திவேல் முன்னிலையிலும் நடைபெற்றது. கொரோனா நோயின் தாக்கம் உலக நாடுகளையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மீண்டும் 3-வது அலை தாக்கக்கூடும் என்ற நிலையில் கொடிய நோய் கொரோனாவினை போக்கும் வகையில் உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகின்றன. இந்த சூழ்நிலையில் முன்னதாக 2-வது அலையில் திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொரோனாநோய் தாக்குதலின் அச்சுறுத்தலில் இருந்து மக்களை மிகத் துரிதமாக



காப்பாற்றினார். இதனை அடுத்து 3-வது அலையில் இருந்து மக்களை காப்பாற்ற வேண்டும் எனும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அனைவருக்கும் கொரோனா நோய் தடுப்பூசி அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் இலவசமாக போடப்படுகிறது. அந்த வகையில் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் ஆலோசனையின்படி பொருளூர் ஊராட்சி மக்களுக்கு கோவிசீல்டு தடுப்பூசி முகாம் நடைபெற்றது. இம்முகாமில் ஆண்கள் மற்றும் பெண்கள் சுமார் 200 பேர் ஆர்வமுடன் பங்கேற்று கோவிசீல்டு தடுப்பூசி போட்டுக் கொண்டனர். மேலும் முக கவசம் அணிந்து சமூக இடைவெளியுடன் கபசுர குடிநீர் அருந்தியும் சென்றனர். இம்முகாமில் வட்டார மருத்துவ அலுவலர் அரவிந்தன், சுகாதார ஆய்வாளர் கருப்புசாமி , சுகாதார செவிலியர்கள் பத்மாவதி, புஷ்பலதா, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள், மற்றும் தூய்மைப் பணியாளர்கள் கலந்துகொண்டனர். ஊராட்சி செயலர் தண்டபாணி நன்றி கூறினார்.

**திண்டிவனம்: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த சின்ன நெற்குனம் பகுதியை சேர்ந்த மண்ணாங்கட்டி என்பவரது மனைவி செந்தாமரை (70). இவர் கடந்த 13ஆம் தேதி தனது மகன் வீட்டில் இருந்து விவசாய நிலத்திற்கு புறப்பட்டு சென்றவர் வீடு திரும்பவில்லை. இவர் சற்று மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது. இவர் காணாமல் போனது குறித்து மயிலம் போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.**



# டாடா டீ வழங்கும் தமிழ் வாழ்க்கை முறை குறித்த புதிய விளம்பரத்துடன் "சக்ரா கோல்ட் கேர்" அறிமுகம்!

சென்னை, ஆகஸ்ட் 20 2021: தென்னிந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய தேயிலை தயாரிப்பு நிறுவனமான டாடா டீ சக்ரா கோல்ட் இன்று புதிதாக டாடா டீ சக்ரா கோல்ட் கேர் என்ற புதிய ரகத்தை புதிய விளம்பரத்துடன் தமிழகத்துக்கென பிரத்யேகமாக அறிமுகம் செய்கிறது. புதிய ரக டாடா டீ சக்ரா கோல்ட் கேர் நலம் பயக்கும் ஐந்து வகையான இயற்கை மூலப் பொருட்களை கலந்து தயார் செய்யப்படுகிறது. அவை, தமிழ் வீடுகளில் உடல் நலனுக்காக பாரம்பரியமாக பயன்படுத்தப்படும் பொருட்களான அதிமதுரம், துளசி, ஏலக்காய், இஞ்சி மற்றும் பிரம்மி ஆகியவற்றை, தங்கள் வாடிக்கையாளர்களின் உடல் நலனை கருத்தில் கொண்டு சேர்த்துள்ளது.




இந்த அறிமுகத்தின் ஒரு பகுதியாக, தமிழர் மனதின் அன்பான பராமரிப்பு முறையை வெளிப்படுத்தும் விதமாக புதிய விளம்பரம் ஒன்றையும் அந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில், தமிழர் வாழ்க்கை முறையானது தங்களது மற்றும் தங்களுக்கு பிரியமானவர்களின் உடல் நலனை காப்பதில் எவ்வாறு அக்கறை கொண்டுள்ளது என்பது சித்தரிக்கப்படுகிறது. இதை மையக் கருத்தாகக் கொண்டு அமைந்துள்ள புதிய ரக சக்ரா கோல்ட் கேர் விளம்பரம், இயல்பாகவே தமிழர்கள் தங்கள் வாழ்முறையில் அன்பான பராமரிப்பை எவ்விதம் வெளிப்படுத்துகின்றனர் என்ற சிறப்பியல்பையும் காட்டுகிறது.

இப்படத்தில், தமிழர் வீடு ஒன்றில், சமையலில் ஈடுபடும் மனைவியை கவனிக்கும் கணவன், அன்றைய தினம் அவள் தலையில் மல்லிகைப் பூ சூடாமல் இருப்பதை உணர்ந்து, அவள் உடல் நலமின்றி இருப்பதை புரிந்து கொண்டு, அவளுக்கு சமையலில் உதவ செல்கிறான். இதே போன்று தமிழரின் அன்றாட வாழ்வில் நடைபெறும் பல்வேறு நெஞ்சை நெகிழச் செய்யும் காட்சிகள் காட்டப்பட்டு அன்பானவர்கள் மீதான தமிழ் மனதின் அக்கறையுள்ள பராமரிப்பு முறையை முல்லன் லிண்டாஸ் இதில் பதிவு செய்துள்ளது. இதே போன்ற மற்றொரு காட்சியில் அன்றாட அக்கறையை வெளிக்காட்டும் வகையில் மனைவி கணவனுக்கு சக்ரா கோல்ட் கேர் தேநீர் தயாரித்து அளிப்பதுடன் இப்படம் முடிவடைகிறது.

இப் புதிய ரகம் அறிமுகம் குறித்து, டாடா கன்ஸ்யூமர் புரொடெக்டஸ் (இந்தியா மற்றும் தெற்காசியா) பேக்கேஜ்டு பெவரேஜஸ் பிரிவின் தலைவர் புனீத் தாஸ் கூறுகையில், இந்த பெருந்தொற்று காலத்தில் வாடிக்கையாளர்கள் நம்பகமான, ஆரோக்கியமான தயாரிப்புகளுக்கு முன்னுரிமை அளிக்கின்றனர். வாடிக்கையாளர்கள் தங்களையும், தங்களது அன்பானவர்களையும் தினசரி அக்கறையுடன் பராமரித்துக் கொள்ள, அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் இந்த புதிய சக்ரா கோல்ட் கேர் ரகத்தை தமிழகத்தில் அறிமுகம் செய்துள்ளோம். தமிழர்களுக்கான தேநீர் என ஏற்கனவே நன்கு அறிமுகமான, டாடா டீ சக்ரா கோல்ட்-ன் விளம்பரங்கள் தமிழர்களின் வாழ்க்கை முறையையும், பிராந்திய பெருமையையும் கொண்டாடும் வகையில் அமைந்துள்ளன. இப்புதிய விளம்பரம் இத்திசையில் மேலும் ஒரு காலடி வைப்பாகும். தனித்தன்மை வாய்ந்த, அக்கறை கொண்ட ஒரு கலாச்சாரத்துக்குள் இன்னும் ஆழமாக செல்வதற்கான ஒரு தனித்துவமான வழிமுறையாகும். அவர்களின் அன்றாட பராமரிப்புக்காக தினமும் ஒரு கப் சக்ரா கோல்ட் கேர் டீ தயாரிப்பதை போல, செயல்பாடுகளின் வழியாக அக்கறையை தமிழர்களின் வாழ்க்கை முறை வெளிப்படுத்துகிறது.

இந்த விளம்பரம் குறித்து, முல்லன் லிண்டாஸ்-தலைமை படைப்பாக்க அதிகாரி, கரீமா கண்டெல்வெல் கூறுகையில், ஒரு பிராந்தியத்தின் குறிப்பான தனித்தன்மையை புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையிலான பிராண்டுகளை அறிமுகம் செய்யும் டாடா டீ-யின் அணுகுமுறையைத் தொடர்ந்து, ஏற்கெனவே தமிழர்களுக்கான டீ என்று பிரபலமான முதன்மை பிராண்டான சக்ரா கோல்ட் ரகத்தை முன்னெடுக்கும் வகையில், சக்ரா கோல்ட் கேர் என்ற புதிய பிராண்டுக்கான விளம்பரத்தை தொடங்கியுள்ளது. தமிழர்கள் தங்களுடைய அக்கறையை வெற்று சொற்களாக இல்லாமல், செயல் மூலம் வெளிப்படுத்துவர். ஒருவரின் தேவையை கேட்காமலேயே அவரது எண்ணத்தை புரிந்து கொண்டு அக்கறையை வெளிப்படுத்துவர். இந்த வர்த்தக விளம்பரம் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையிலான இது போன்ற மென்மையான தருணங்களையும், தமிழர்களின் அக்கறை மிகுந்த தனித்துவமான வாழ்க்கை முறையையும் கொண்டாடுகிறது. இந்த டாடா டீ சக்ரா கோல்ட் கேர் அனைத்து இ-காமர்ஸ் தளங்களிலும், முன்னணி கடைகளிலும் கிடைக்கும்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# திண்டிவனத்தில் காற்றில் பறக்கவிடப்படும் நகராட்சி ஆணையரின் உத்தரவு



திண்டிவனம், ஆகஸ்ட் 20 2021: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் நகராட்சிக்கு உட்பட்ட தெருக்களின் ஓரங்களிலும், கோவில்கள் உள்ளிட்ட வழிபாட்டுத் தலங்களின் முன்பும் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன. இதுகுறித்து திண்டிவனம் நகராட்சி சார்பில் ஆணையர் ஆங்காங்கே அறிவிப்பு பலகைகளை வைக்கப்பட்டும் அதனை காற்றில் பறக்க விட்டபடி தொடர்ந்து குப்பைகள் கொட்டப்பட்டு வருகிறது. துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



**விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் முன்னாள் ஒருங்கிணைந்த ஒன்றிய கழகச் செயலாளரும், முன்னாள் மாவட்ட கவுன்சிலரும், முன்னாள் திண்டிவனம் நகர மன்றத் தலைவருமான வழக்கறிஞர் பூபாலன் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் நேற்று (19ஆம் தேதி) காலை 5 மணி அளவில் இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (20ஆம் தேதி) திண்டிவனத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும்.**



**மதுரை : மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் வடபழஞ்சி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் சாலையோரங்களில் மரம் நடும் பணியையும் சங்கன் குளம் அமைக்கும் பணியையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் பார்வையிட்டார்.**



**மதுரை: மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தோப்பூர் கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ் சேகர் மரக்கன்று நடும் பணியினை பார்வையிட்டு மரக்கன்றினை நாட்டினார்.**




**சிவகங்கை: சிவகங்கை நகராட்சி கமிஷனரை கண்டித்து சிவகங்கை நகர் முன்னாள் கவுன்சிலர் எம் அன்புமணி தர்ணா போராட்டம்.**

# கொலம்பியா பசிபிக் கம்யூனிட்டீஸ் நிறுவனம் உலக மூத்த குடிமக்கள் தினத்தையொட்டி நேர்மறை முதுமை அறிக்கையை வெளியிட்டுள்ளது

சென்னை, ஆகஸ்ட் 20 2021: முதியோர் ஒய்வாக இருக்க விரும்புவார்கள் என்ற பரவலான நம்பிக்கைக்கு மாறாக, இன்றைய மூத்த குடிமக்கள் உள்ளனர். வயது முதிர்ச்சியின் போது நேர்மறையான அணுகுமுறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம், மூத்த குடிமக்\கள் புதிய தொழில் முறைகளை ஆய்வு செய்து, தங்கள் ஆர்வத்தைத் தொடரவும், சமூக நலனில் மேலும் தீவிரமாக ஈடுபடவும் விரும்புகிறார்கள். பாரம்பரியமாக நிலவும் நம்பிக்கைகளையும் கருத்துக்களையும் ஆராய்ந்து, மூத்த குடிமக்களின் தேவைகளைப் புரிந்துகொள்ளும் நோக்கத்துடன், இந்தியாவின் மிகப்பெரிய மூத்த குடிமக்களுக்கான குடியிருப்புகளை அமைக்கும் நிறுவனமான கொலம்பியா பசிபிக் கம்யூனிட்டீஸ், நிறுவனம் கோல்டன் ஏஜர்கள் எனப்படும் மூத்த குடிமக்களின் துடிப்பான செயல்பாடுகள் தொடர்பான இந்தியாவின் முதல் நேர்மறை அம்சங்கள் கொண்ட அறிக்கையான தி பாசிட்டிவ் ஏஜிங் ரிப்போர்ட் என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது. விரிவான கள ஆய்வுகள் மூலம் இந்த அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளது. உலக மூத்த குடிமக்கள் தினம் ஆகஸ்ட் 21 அன்று கொண்டாடப்படும் நிலையில் இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது. இந்த அறிக்கை, 21-ம் நூற்றாண்டின் இளைஞர்களை ஒப்பிடுகையில் மூத்த குடிமக்களின் விருப்பங்கள் தொடர்பாக எடுத்துரைக்கிறது. மூத்த குடிமக்களின் தேவைகள் மற்றும் அவர்களின் முதுமை தொடர்பான பார்வை பற்றிய ஆழமான தகவல்களையும் இது வழங்குகிறது.

கொலம்பியா பசிபிக் கம்யூனிட்டீஸ் நிறுவனத்தின் முன்முயற்சி மற்றும் ஏற்பாட்டில் இன்னொவேட்டிவ் ரிசர்ச் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம் நேரடி மற்றும் தொலைபேசி வாயிலாக பல்வேறு வயதினர் மத்தியில் நேர்காணல்களை நடத்தி கருத்துகளை கேட்டறிந்துள்ளது. பெங்களூரு, டெல்லி, ஹைதராபாத், மும்பை மற்றும் புனேயில் இருந்து 18 வயதிற்கு மேற்பட்ட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு பதில்கள் பெறப்பட்டுள்ளன. 18 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்களை ஜென் இசட் எனவும் மில்லினியல்கள் என்றும் ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படுகிறது. 36 முதல் 45 வயதிற்கு உட்பட்டவர்கள் ஜென் எக்ஸ் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த அறிக்கை வெளியீட்டு நிகழ்ச்சியில், முதியோர் மத்தியில் உள்ள தனிமை பிரச்சினை குறித்து கவனம் செலுத்தி, பதில் அளிக்காமல் புறக்கணிக்காதீர்கள் என்ற பொருண்மையிலான 'ரிப்ளை டோன்ட் ரிஜெக்ட்' என்ற ஹேஷ்டேக் மூலம் முன்முயற்சியை கொலம்பியா பசிபிக் கம்யூனிட்டீஸ் தொடங்கியது. கருத்தியல் ரீதியாக பாராட்டப்படும் இந்த முன்முயற்சியை மூத்த நடிகர் போமன் இரானி தொடங்கி வைத்தார். இந்த முன்முயற்சி இளைய தலைமுறையினருக்கு, ஒரு தனித்துவமான அழைப்பை விடுக்கிறது. மூத்த குடிமக்களிடமிருந்து தொலைபேசிகள், சமூக வலைதளங்களில் அடிக்கடி வரும் வீடியோ, புகைப்படம் அல்லது காலை வணக்கம் தொடர்பான பதிவுகளை வெறும் பகிர்வுப் (ஃபார்வேர்டு மெசேஜ்) பதிவுகளாகக் கருதுவதைத் தவிர்க்குமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது. அடிக்கடி தகவல் அனுப்பும் செயலை முதியோர் விரும்புவது ஏனென்றால் அது மனிதர்களை இணைக்கும் வாய்ப்பாக அமைகிறது. அதன் மூலம் தகவல்களைப் பகிர்வதுடன் தனிமையை எதிர்த்துப் போராடும் ஒரு வாய்ப்பாகவும் அவர்கள் அதைப் பயன்படுத்துகின்றனர். எனவே அவற்றுக்கு அவ்வப்போது பதில்களை அனுப்புமாறு இளைஞர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

கொலம்பியா பசிபிக் கம்யூனிட்டீஸ் நிறுவனம் முதியோர்களுக்கான தனித்துவமான ஒரு வாய்ப்பாக, நிச்சயமற்ற தன்மைக்கு எதிரான அட்டைகள் என்ற பொருளில் கார்ட்ஸ் எகெய்ன்ஸ்ட் அன்செர்டெய்னிட்டி என்ற அட்டைகளை அதன் இணையதளத்தில் அறிமுகம் செய்துள்ளது. இது முதியோர்களின் மன நலத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 52 அட்டைகளின் தொகுப்பாக இந்த அட்டைகள் உள்ளன. மன அழுத்தம், பயம் மற்றும் விரக்தி உணர்வுகளை குறைப்பதை இவை நோக்கமாகக் கொண்டுள்ளன. ஒவ்வொரு அட்டையிலும் ஒரு தனித்துவமான குறிப்பு மற்றும் மனநிலையை மேம்படுத்தும் பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளன.

# 420 கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது

மதுரை, ஆகஸ்ட் 20 2021: மதுரை மாவட்டம், 420 கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களின் செயலாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநில குழந்தைகள் ஆணைய உறுப்பினர் முனைவர்.வீ.ராம்ராஜ் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டரங்கில், மாநில குழந்தைகள் ஆணைய உறுப்பினர் முனைவர்.வீ.ராம்ராஜ் அவர்கள் தெரிவிக்கையில்:- குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை, இணையவழி குற்றம் மற்றும் போதை பழக்கம் உள்ளிட்ட மூன்று பிரச்சனைகளை கவனிக்காவிட்டால் இந்தியாவின் எதிர்காலம் பாதிப்பிற்குள்ளாகும். இன்றைய குழந்தைகள்தான் நாளைய தேசம் என்ற அடிப்படையில் குழந்தைகளை பேணிப்பாதுகாப்பது நமது கடமையாகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பதற்கேற்ப குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதன் மூலம் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களிலிருந்து அவர்களை பாதுகாக்கலாம். தற்போதுள்ள கொரோனா சூழ்நிலையில் கல்வியில் இடைநிற்றல் அதிகமாகிறது. இதனால் குழந்தைகள் குழந்தை தொழிலாளர்களாக ஈடுபடுத்தப்படுகின்றனர். பெற்றோர்கள் சம்மதத்துடனும், சமூகவலைதளத்தின் பயன்பாடு காரணமாகவும் குழந்தை திருமணம் நடைபெறுகிறது. இதனால் வளர்பருவ கர்ப்பம் குழந்தைகளிடையே உண்டாகிறது. இதுபோன்ற குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும். மேலும், குழந்தை பாதுகாப்பு குழுக்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். குழந்தைகளின் உரிமைகள் எவை, குழந்தைகள் தொடர்பான சட்டங்கள் எவை மற்றும் குழந்தைப் பாதுகாப்பு குழுக்களின் முக்கியத்துவம் என்ன என்பவை போன்றவற்றை இத்திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மதுரை வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், ஒத்தக்கடையில் மேலூர் வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், நாளைய தினம் காலையில் திருமங்கலம் வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கும், பிற்பகல் உசிலம்பட்டி வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் இத்திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இரண்டாம் கட்டமாக மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிக்கு உட்பட்ட குழுக்களுக்கும் இத்திறன் மேம்பாட்டு பயிற்சிக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதன் மூலம் மதுரை மாவட்டத்தில் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழுக்களின் உறுப்பினர்கள் குழந்தை பாதுகாப்பு தொடர்பான தேர்க்கங்களை தெரிந்து கொள்வார்கள். அதன் மூலம் மதுரை மாவட்டத்தில் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகள் தீவிரமாக தடுக்கப்படும் என மாநில குழந்தைகள் ஆணைய உறுப்பினர் தெரிவித்தார்.

இக்கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்:- குழந்தைகள் பாதுகாப்பு குழுக்களுக்கு இப்பயிற்சி முகாம் நடத்துவதற்கு முன்பாக முன்னேற்பாடு கூட்டம் மாநில உறுப்பினர் அவர்களுடன் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை சார்பில் அரசாணை எண் 30 மற்றும் 31 ஆகியவற்றை குழந்தை பாதுகாப்பு தொடர்பாக வெளியிட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு கிராம பஞ்சாயத்து தலைவராகவும், கிராம நிர்வாக அலுவலர் உறுப்பினர் செயலராகவும், வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து ஒன்றிய தலைவராகவும், வட்டார வளர்ச்சி அலுவலர் உறுப்பினர் செயலராகவும், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகின் பிரதிநிதி ஆகியோர் உறுப்பினராகவும் இக்குழு அமைக்கப்பட உள்ளது. இதேபோல் மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்பு குழுவும், நகராட்சி அளவில், பேரூராட்சி அளவில் மற்றும் மாநகராட்சி மண்டல அளவிலும் குழந்தை பாதுகாப்பு குழு அமைக்கப்பட உள்ளது.

கிராம நிர்வாக அலுவலர்கள் தங்களது கிராம அளவில் குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதி செய்திடல் வேண்டும். குழந்தைகளின் உரிமை பறிக்கப்படுகின்றது என்ற செய்திகள் செய்தித்தாள்கள் மூலம் தெரியவருகிறது. தற்போது குழந்தை திருமணம் மற்றும் பாலியல் குற்றங்கள் அதிகரிக்கின்றது. குழந்தை பாதுகாப்பு குழுக்களுக்கு இதுபோன்ற தகவல் கிடைத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் குழந்தைகளாக கருதப்படுவர். குழந்தைகளுக்கு கல்வி உரிமை கிடைக்கின்றதா என்ற இக்குழு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். நம் நாட்டின் நலனுக்காகவும், எதிர்கால நன்மைக்காகவும் குழந்தைகளை பாதுகாக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செந்தில் குமாரி அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராஜ்குமார் அவர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.அ.சுகணேசன் அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் (மேலூர்) திருமதி.பிரிதோஷ் பாத்திமா அவர்கள், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.கோட்டூர் சாமி அவர்கள் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ஜஸ்டின் ஜெயபால் அவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காட்சி ஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், அகரமுதலி இயக்ககத்தினால் வழங்கப்படும்

மதுரை, ஆகஸ்ட் 20 2021: மதுரை மாவட்டம், காட்சி ஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், அகரமுதலி இயக்ககத்தினால் வழங்கப்படும் "தூயதமிழ் ஊடக விருது"-க்கு ஊடக நிறுவனத்தார் 31.08.2021-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.எஸ்.அனீஷ் சேகர் (18.08.2021) தெரிவித்துள்ளார்.

அன்றாடம் மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான செய்திகளை முன்னறிந்து கொடுக்கும் செம்மாந்த பணிகளைச் சிறப்புடன் செய்து வருகின்ற காட்சி, அச்சு ஊடகங்கள் மொழிக்காப்பிலும் முகாமையான பங்காற்றுகின்றன.

ஊடக மொழியே உலகமொழியாகி விட்ட இன்றைய நிலையில், காட்சி மற்றும் அச்சு ஊடகங்களின் உதவியோடுதான் நல்ல தமிழ்ச்சொற்களையும் காலத்திற்கேற்ற புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் புழங்கு மொழியாக்க முடியும்.

மொழிக்கலப்பைத் தவிர்த்தலே தமிழ்மொழியைக் காப்பதற்கும் வளப்படுத்துவதற்குமான அடிப்படையாகும். எனவே, தூயதமிழைப் பயன்படுத்தும் காட்சி ஊடகங்களையும், அச்சு ஊடகங்களையும் பாராட்டி ஊக்கமளிக்கும் வகையில், தூய தமிழ் ஊடக விருதினைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

தூய தமிழ்ச் சொற்களையும், காலத்திற்கேற்ற புதிய கலைச்சொற்களையும் பயன்படுத்தி மக்களுக்குச் செய்திகளை வழங்கும் இரு காட்சி ஊடகத்தையும், ஓர் அச்சு ஊடகத்தையும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் வழியாகத் தேர்வு செய்து, தமிழ் அகராதியியல் நாள் விழாவின் போது தூய தமிழ் ஊடக விருதும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும். விருதுத் தொகையாக ஒரு ஊடகத்திற்கு ரூபாய் 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)-மும், தங்கப்பதக்கம் மற்றும் தகுதியுரைச் சான்றிதழும் வழங்கப்படும். காட்சி ஊடகப் பிரிவில் தொலைக்காட்சி ஊடகங்கள் மட்டுமே ஏற்கப்படும். அச்சு ஊடகப் பிரிவில் அரசு பதிவெண் பெற்று குறைந்தது 10 ஆண்டுகள் இடைநிறுத்தம் இல்லாமல் வெளிவரும் நாளிதழ், வாரஇதழ், மாத இதழ் ஆகியவை விண்ணப்பிக்கத் தகுதியானவைகளாகும்.

விருது பெறத் தகுதிவாய்ந்த, விருப்பமுள்ள ஊடக நிறுவனத்தார் சொற்குவை.காம் என்ற வலைத்தளத்தில் உள்ள விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்து, நிரப்பி தங்கள் நிறுவனம் தூயதமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் சான்றுகளை இணைத்து, 31.08.2021 ஆம் நாளுக்குள் ஷ்ஷ்பிணரிணிஸ்விஷ்ஷ்@ரிணிணீவிரீ.நிஷ்ன் என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதுடன், இயக்கக முகவரியான இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட் இயக்ககம், நகர் நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி.நகர், சென்னை -600 028 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ 31.08.2021 மாலை 5.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

# காஞ்சிபுரம் அருகே லாரியில் கடத்தி வரப்பட்ட 15 டன் ரேஷன் அரிசி பறிமுதல்: டிரைவருக்கு போலீஸ் வலைவீச்சு

காஞ்சிபுரம், ஆகஸ்ட் 20 2021: காஞ்சிபுரம் அருகே லாரியில் கடத்தி வரப்பட்ட 15 டன் ரேஷன் அரிசியை தனி வட்டாட்சியர் தலைமையில் அதிகாரிகள் மடக்கி பிடித்து பறிமுதல் செய்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரேஷன் அரிசி கடத்தலை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் முடுக்கி விட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் இருந்து சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் லாரி மூலம் ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக காஞ்சிபுரம் குடிமைப்பொருள் தனி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது.

ரகசிய தகவலின் அடிப்படையில் குடிமைப்பொருள் தனி வட்டாட்சியர் வாசுதேவன் தலைமையில் குடிமைப்பொருள் அதிகாரிகள் சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை பொன்னேரி கரை பகுதியில் காஞ்சிபுரம் தாலுகா போலீசாருடன் இணைந்து தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ஸ்ரீபெரும்புதூரில் இருந்து காஞ்சிபுரம் நோக்கி வந்த லாரியை சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தியபோது லாரி ஓட்டுனர் லாரியை நிறுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டார்.

இதைத்தொடர்ந்து லாரியை குடிமைப்பொருள் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டபோது லாரியில் 15 டன் ரேஷன் அரிசி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து லாரியுடன் அரிசியை பறிமுதல் செய்து இதுகுறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய லாரி டிரைவரை காஞ்சிபுரம் தாலுகா போலீசார் தேடி வருகின்றனர்.

# காஞ்சிபுரத்தில், தண்ணீரில் மிதக்கும் அதிசய கல் கூலி தொழிலாளி கண்டெடுப்பு

காஞ்சிபுரம், ஆகஸ்ட் 20 2021: காஞ்சிபுரத்தில், தண்ணீரில் மிதக்கும் அதிசய கல்லை, கூலி தொழிலாளி ஒருவர் கண்டெடுத்துள்ளார்.

காஞ்சிபுரம் ஒக்கப்பிறந்தான் கோவில் குளத்தில் இருந்து, மிதக்கும் தன்மை கொண்ட அதிசய கல் ஒன்றை, காஞ்சிபுரம் பல்லவர்மேட்டை சேர்ந்த சுமை தூக்கும் தொழிலாளர் செல்வராஜ் என்பவர் கண்டெடுத்துள்ளார். இதுகுறித்து செல்வராஜ் கூறியதாவது: எனது தங்கை மகன், கல் ஒன்றை ஆனியால் செதுக்கி கொண்டு இருந்தான். அவனிடம் என்ன செய்கிறாய் என, கேட்டேன். ஒக்கப்பிறந்தான் கோவில் குளத்தில், கல் ஒன்று மிதந்து கொண்டிருந்தது. அந்த கல்லில் சிவலிங்கம் செய்கிறேன் என, தெரிவித்தான். பின், அந்த கல்லை எங்கள் வீட்டு தண்ணீர் தொட்டியில் போட்டேன் அது மூழ்காமல் மிதந்தது. இதுகுறித்து தகவல் அறிந்த பொதுமக்கள், தண்ணீரில் மிதக்கும் கல்லை ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர்.



ராமாயணத்தில் பாலம் அமைக்க பயன்படுத்தப்பட்ட கல் தண்ணீரில் மூழ்காமல் மிதந்தது என, கேள்விப்பட்டுள்ளேன். இந்த கல்லும் அதுபோன்ற அதிசய கல்லாக இருக்கும் என்பதால், காஞ்சிபுரத்தில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஒப்படைக்க உள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.

தண்ணீரில் மிதக்கும் கல் குறித்து, காஞ்சிபுரம் அரசு அருங்காட்சியக காப்பாட்சியர் உமாசங்கர் கூறியதாவது:

இது பவளப்பாறை வகையை சார்ந்தது. இவ்வகை பாறைகள் கடலில் மட்டுமே காணப்படும். ராமநாதபுரம் மாவட்டத்தை ஒட்டியுள்ள கடற்கரை பகுதியில் காணப்படுகிறது. அரிதாக காணப்படும் இவ்வகை பவளப்பாறைகளை யாராவது கொண்டு வந்து காஞ்சிபுரத்தில் குளத்தில் போட்டு இருக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# வேப்பூர் அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதி, முகவரி தெரியாத மூதாட்டி ஒருவர் இறந்தார்.

வேப்பூர், ஆகஸ்ட் 20 2021: கடலூர் மாவட்டம், வேப்பூர் அடுத்த கொளப்பாக்கம் பஸ் நிறுத்தம் அருகே, நேற்று நள்ளிரவு 12:00 மணியளவில் 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவர் இறந்து கிடப்பதாக வேப்பூர் போலீசாருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் மூதாட்டி உடலை மீட்டு விருத்தாசலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரித்தனர். மூதாட்டி அப்பகுதியில் பிளாஸ்டிக் பாட்டில்களை சேகரித்து வந்ததும், நேற்று நள்ளிரவு பாட்டில்களை சேகரித்து கொண்டு, திருச்சி மார்க்க சாலையில் நடந்து சென்ற போது, அவ்வழியே வந்த அடையாளம் தெரியாத வாகனம், மூதாட்டி மீது மோதியது தெரிய வந்தது. இது குறித்து வேப்பூர் போலீசார் மூதாட்டி மீது மோதிவிட்டு



நிற்காமல் சென்ற வாகனம் குறித்து வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# HELLO Mirror MADRAS

hellomadrasdaily@gmail.com
R.DIS No: 60/2021
Daily Morning Newspaper
The Truth

KARUNAII TRUST
Contact : 98413 59935

VOLUME - 1 | CHENNAI | DAILY | 4 Pages | Friday, August 20, 2021 | Rs.2/- | ISSUE - 37

## Bengaluru S&T (BeST) cluster and Bangalore Chamber of Industry and Commerce (BCIC) sign MoU: Move to strengthen technology development ecosystem in Karnataka



New Delhi, August 20 2021: The Bangalore Chamber of Industry and Commerce (BCIC) and the Indian Institute of Science (IISc) – on behalf of the Bengaluru S&T (BeST) cluster entered into an MoU to foster collaboration and support the activities of BeST on 18th August 2021.

"The MoU brings together the R&D strengths of the Bangalore S&T Cluster with the expertise and experience of the Industries through BCIC, to set up a robust and vibrant innovation-driven technology development ecosystem," remarked Prof. K VijayRaghavan, PSA to GoI on the MoU signing.

Registrar of IISc on behalf of Bangalore STI City Cluster along with Prof Ambarish signing MoU with Shri Parasuraman, President Bangalore chambers of commerce in presence of Dr Sapna Poti, Director Strategic Alliances, Office of Principal Scientific Adviser to GoI.

BeST is an initiative of the Prime Minister's Science, Technology & Innovation Advisory Council (PM-STIAC) launched with support from the Office of the Principal Scientific Adviser (PSA) to the Government of India, to enable R&D of key national missions and solve problems for the Indian and global industry. BeST is one of several national science and technology clusters being established in the country, to ensure better synergy between academic institutions, national and state research laboratories, and other stakeholders like relevant ministries, industry partners, start-ups, MSMEs, state governments, philanthropic foundations, and international organisations. Currently supported by IISc, BeST is soon to be formalised as an independent entity.

BCIC, set up in 1976, is the apex Chamber of Industry and Commerce, representing large and medium industries in the state of Karnataka. Mr. T R Parasuraman, President, BCIC said, "This MoU between BCIC and IISc (on behalf of BeST cluster) will be a huge gateway to promote innovation and research among industries and will deepen industry's contribution in the country's national missions." The Chamber represents all segments of the industry including manufacturing, aerospace, IT, biotech, pharma, engineering, garments, food processing, steel, and services.

BCIC has partnered with BeST to identify opportunities to collaborate on new projects in diverse fields, promote academic and R&D partnerships, and exchange information and technology expertise. BCIC will also support BeST in connecting with corporate partners and encouraging collaborative projects between academia and industry and raising visibility for activities undertaken by BeST. Prof Ambarish Ghosh, Professor in the Centre for Nano Science and Engineering (CeNSE), IISc, and the co-Principal Investigator of BeST expressed his pleasure on the signing and noted "[entering] into this partnership with BCIC [for] this important initiative, can have a great impact on the S&T ecosystem in the city [Bengaluru]," says Ambarish Ghosh. The partnership is also expected to spur training programmes, webinars, lectures, and educational courses to cater to diverse stakeholders.

## Ministry of Tourism Signs MOUs with Make MyTrip(India) Private Limited and Ibibo Group Private Limited to strengthen hospitality and tourism industry in the country especially in pandemic times

New Delhi, August 20 2021: Ministry of Tourism in its ongoing efforts to strengthen the Hospitality & Tourism Industry especially in the times of the pandemic, has signed the Memorandum of Understanding (MoU) with MakeMyTrip (India) Private Limited and Ibibo Group Private Limited on 17.08.2021. Ministry of Tourism has already signed MoUs with Easy my Trip, Clear trip and Yatra.com.

The primary objective of this MoU is to provide an extensive visibility to accommodation units, which have self-certified themselves on SAATHI (System for Assessment, Awareness & Training for the Hospitality Industry) on the OTA platform. The MoU also outlines both parties to encourage Units to register on NIDHI and thereby on SAATHI and encourage local tourism Industry with appropriate safeguards for curbing spread of COVID-19. The idea is also to gather more information on accommodation units in order to gain actionable insights & designing evidence based & targeted policy measures and to promote safe, honourable and sustainable tourism.

The event was organized under the arrangement between Ministry of Tourism and Quality Council of India (QCI) for implementing measures for strengthening the Indian Hospitality & Tourism Industry.

The signing MoU was done in the presence of Shri Rakesh Kumar Verma, Joint Secretary, Ministry of Tourism, Shri Sanjay Singh, Deputy Director General



(H&R), Ministry of Tourism, Dr. A Raj, Senior Director, QCI, Shri Mohit Singh, Deputy Director, QCI, Dr. Mahavir Prasad Tiwari, Deputy Director, QCI, Shri. Abhishek Logani, Chief Business Officer-Hotels, MakeMyTrip (India) Private Limited & Ibibo Group Private Limited and Shri. Venkatesh Ramakrishna, SVP – Corporate Affairs, MakeMyTrip (India) Private Limited & Ibibo Group Private Limited.

The Ministry of Tourism and MakeMyTrip (India) Private Limited & Ibibo Group Private Limited will endeavour to take necessary steps to encourage and promote strategic and technical co-operation in the Indian hospitality & tourism sector for overall benefit in the identified areas through the MoU. It is expected that, in the future more OTAs will come forward for signing such MOUs in order to strengthen the Hospitality & Tourism Industry of India.



**New Delhi, August 20 2021: The President of India, Shri Ram Nath Kovind, paid homage to Dr Shanker Dayal Sharma, former President of India, on his birth anniversary at Rashtrapati Bhavan today (August 19, 2021). The President and officials of Rashtrapati Bhavan paid floral tributes in front of the portrait of Dr Shanker Dayal Sharma.**

## Aakash Educational Services Limited Announces India's Largest All-India NEET Mock Test 2021

Chennai, August 20 2021: Aakash Educational Services Limited (AESL),the national leader in test preparatory services along with BYJU'S, the leader in digital learning have announced India's largest ALL-India NEET Mock Test 2021 which will be conducted online on August 22, 29 and September 05, 2021. The registration for the mock test is open and is free of cost. NEET aspirants who wish to register for the mock test, can do so by clicking on the linkhttps://aakashdigital.com/mock/neet-test

To gain maximum confidence about the preparedness for one of the toughest entrance exams, the online mock test has been prepared keeping in line the revised NEET pattern. Each paper will be of 3 hours thus providing aspirants a real feel of the examination.The test papers have been planned by experienced Aakash experts and participating students will get an All-India Rank to benchmark their performances against all the aspirants across the country. Post announcement of the results, an advanced analytical report will be provided by the Aakash teamto help NEET aspirants identify their weak areas which require attention.After the examination, the students will also get access to an in-depth video solution of the test papers which will help them develop a holistic understanding of the concepts and theories.

Commenting onAll India Mock Test for NEET 2021, Aakash Chaudhry, Managing Director, Aakash Educational Services Limited (AESL) said,"Honoring our commitment to the 'students first' approach, we are conducting India's largest online All-India NEET Mock Test 2021. To courage more student participation for fulfilling their dreams, we have kept the registration free of cost. It is essential for aspirants to control their nerves during the final examination. The mock test will only provide students a real-time NEET 2021 testing experience which will help them accelerate their preparation and work on areas which require immediate consideration. It will also aid them in keeping the anxieties and stress at bay."

## Piyush Goyal chairs the "5th meeting of BRICS Industry Ministers"

New Delhi, August 20 2021: Union Minister of Commerce and Industry, Consumer Affairs, Food & Public Distribution and Textiles, Shri Piyush Goyal today chaired the " 5th meeting of BRICS Industry Ministers" Meeting under the Chairship of India. The Industry Ministers of BRICS Countries (Brazil, Russia, China and South Africa) H.E. Mr. Xiao Yaqing Minister of Industry & IT of the People's Republic of China, H.E. Mr. Ebrahim Patel, Minister of Trade, Industry & Competition of the Republic of South Africa, H.E. Mr. Carlos Da Costa, Deputy Minister, Ministry of Economy, Government of Federative Republic of Brazil and H.E. Mr. Denis Manturov, Minister of Industry and Trade of the Russian Federation and delegates attended the virtual meeting.

India chose the theme of BRICS@15: Intra BRICS Cooperation for Continuity, Consolidation and Consensus for its Chairship, this year.

In the 5th Meeting of BRICS Industry Ministers held on 18th August 2021, the Joint Declaration was adopted.

India's efforts of channelizing technology towards good and smart governance thus increasing transparency and accountability, were highlighted. India has developed a vibrant and dynamic start-up ecosystem, leveraged existing platforms and digital technologies such as Aadhar and UPI payments for ensuring delivery of critical services to the last mile. Online systems like COWIN and digital vaccination certificates are being cited as success stories across the world today.

Ministers recognized the unprecedented impact of the COVID-19 pandemic particularly in the fields of trade and industry. They complimented all the COVID warriors, our doctors, nurses, paramedical staff and scientists, across all the BRICS countries, for their selfless and tireless efforts in saving our lives.

They appreciated the need for adopting the emerging new technologies in a swiftly changing world and recognized this as an important tool for modernization and transformation of industry, promotion of inclusive




economic growth, thus helping BRICS national economies to meet the Sustainable Development Goals.

They agreed on the need to build human resources in line with the changing requirements accelerated by the new emerging technology to promote training and skills development of the related workforce and businesses through workshops, seminars, and exchange programs.

They reiterated their commitment to make efforts to foster open, fair, and non-discriminatory trade environment, ensure greater participation in global value chains, promote digital inclusion, assess the implications, and encourage the progressive, safe, equitable, and sustainable use of disruptive technologies for advancing growth.

They expressed their intention to collaborate with the New Development Bank (NDB). India expressed the desire to expand the horizon of NDB and resources be utilized for strengthening of social infrastructure besides promotion of Industrial sector.

The meeting concluded with the BRICS Industry Ministers reaffirming their commitment to work together as a group, complement strengths of each other, share best practices and learn from weaknesses, and move ahead in a positive and constructive manner to achieve the 2030 Agenda for Sustainable Development.

## YES BANK among 100 Best Emerging Market Performers,according to V.E, part of Moody's ESG Solutions

Chennai, August 20, 2021: YES BANK is among the 100 Best Emerging Market Performers as assessed by V.E, part of Moody's ESG Solutions. The ranking, as of July 2021, comprises the top 100 performing companies listed in developing markets with the most advanced scores in social responsibility, human rights, employment practices, environmental protection, corporate governance, business ethics and contributions to social and economic development in areas where they operate.

YES BANK continues to be the only Indian Bank in the ranking. It was first included in the V.E ranking from December 2017-June 2019 period.

The top performers are based on V.E's Equitics® Emerging Markets Universe, which covers 843 companies from 31 countries. The companies shortlisted for the review are listed in 17 countries and cover 22 sectors. V.E assesses the performance of companies according to the Equitics® methodology, which is based on 38 ESG criteria and nearly 330 indicators broadly categorized under six key areas of environment, human rights, human resources, community involvement, business behaviour and corporate governance. The composition of this ranking is updated by V.E annually in July.

Commenting on the achievement, Niranjan Banodkar, Chief Financial Officer, YES BANK, said, "We are pleased to regain our position on V.E's prestigious 'Best Emerging Market Performers' ranking. It is a testament to the significant steps taken by the Bank towards strengthening its governance frameworks, sharpening its focus on climate, environmental and socioeconomic performance, and making comprehensive disclosures on how it is focusing on building a responsible, resilient franchise aimed at creating sustainable value for all its stakeholders."

YES BANK has taken significant steps to integrate ESG considerations into its business strategy. The Bank has voluntarily adopted an Environment and Social Policy to address potential ecological and social risks associated with its lending activities. It has instituted an ISO 14001:2015 certified Environmental Management System to address the impact of its operations, while also adopting an ESG-linked Supplier Code of Conduct to integrate sustainability into its supply chain.

Committed to climate goals, the Bank has taken definitive action towards measuring its financed emissions and aligning its electricity portfolio with global decarbonization pathways and achieving a 5% reduction in the carbon emission intensity of its operations in FY21 over the year before. It was rated 'A-' (Leadership Band) by CDP for its 2020 Climate Change disclosures.

In FY21, the Bank's Inclusive & Social Banking and Microfinance Banking divisions continued to deliver access to finance to 9.8 lakh women customers in rural and semi-urban areas. Its Corporate Social Responsibility initiatives trained farmers in productivity enhancement and also ensured access to safe and clean drinking water in FY21.

The Bank remains the only Indian Founding Signatory to the Principles for Responsible Banking – the first global framework enabling banks to align their business to the objectives of the Sustainable Development Goals adopted by the United Nations and the Paris Agreement on climate change.

Owned & Pubilshed by R.SATHYANARAYANAN from No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 26, and printed by him at chennai offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-2, Editor: R.SATHYANARAYANAN, Email: hellomadrasdaily@gmail.com. Contact: 8148231942. Subject to Chennai Court Jurisdiction